**த. நா.ச.பே. எண் : 011** **நாள் : 01.04.2015**

<u>தொடர்ச்சி – 4</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று **(1.4.2015)** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், **2015–2016**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை:–

---

விவசாயத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மிகுந்த முன்னுரிமையினை அளித்ததன் பயனாக 2010-11ல் 75.95 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த உணவு உற்பத்தி, 2014-15ல் 122.86 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. விவசாயத் துறையின் பொருளாதார வளர்ச்சி வீதமும் 2013-14, 2014-15 ஆம் ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்துள்ளது. விவசாயத் துறைக்கு 2010-11 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 2,072.43 கோடி ரூபாய்தான். ஆனால் இத்துறைக்கான 2015-16 ஆம் ஆண்டின் ஒதுக்கீடு 6,613.68 கோடி ரூபாய் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக விவசாய சாகுபடி பரப்பளவையும், உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் வருவாயினையும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து முனைப்பாக செயல்பட்டு வருகிறது. சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க நுண்ணீர் பாசனம், இயந்திரமயமாக்கலுக்கு கணிசமான ஒதுக்கீடு, பயிர் அடிப்படையிலான உயர் சாகுபடி முறைகளைப் பரவலாக்கல், தோட்டக்கலைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்தல், உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் துல்லிய பண்ணை முறை, பசுமைக்குடில் சாகுபடி, வலை நிழல் சாகுபடி (Polyhouse Greenhouse Cultivation and Shadnet Cultivation) என பல திட்டங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு போதுமான நிதியை ஒதுக்கியுள்ளது. இது தவிர, சேமிப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முதல் மாவட்ட அளவு வரை சேமிப்புக் கிடங்கு வசதிகளைக்

கணிசமாக மேம்படுத்தியதுடன் விற்பனைக் கட்டமைப்புகளையும் தரம் உயர்த்தியது, விவசாய உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தும் தொழிலையும் ஊக்குவித்தது போன்ற எண்ணற்ற திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து முன்னுரிமை வழங்கிவருகிறது.

வறுமை ஒழிப்பு பற்றி ஏதும் இல்லையென சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். அவர்கள் பார்வையில் ஏனோ இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள பல நல்ல விஷயங்கள் தென்படுவதில்லை. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்துவது போன்ற ஒரு ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்பு திட்டத்தை, இதுவரை எந்த அரசும் செயல்படுத்தவில்லை என்பதை இங்கே உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறப் பகுதிகளைப் பொறுத்தவரை, புதுவாழ்வுத் திட்டம், கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம் ஆகிய திட்டங்கள் ஒருங்கிணைந்த யுக்திகளுடன் இம்மாநிலத்தில் முழுமையாக வறுமையை அகற்றிட மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களாகும். அதே போல் நகர்ப்புரப் பகுதிகளுக்கு 2012-13 ஆம் ஆண்டிலிருந்து நகர்ப்புர வாழ்வாதார திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கியது. தற்போது இத்திட்டத்துடன் இணைத்து மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புரப் பகுதிகளில் இந்த திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசு நாடு முழுவதற்கும் 1,800 கோடி ரூபாயினை மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ள நிலையிலும் கூட தமிழக அரசு, 2015-16 ஆம் ஆண்டுக்கு நமது மாநிலத்திற்கு மட்டுமே 862.40 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. இதிலிருந்து எந்த அளவுக்கு வறுமை ஒழிப்பிற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்பைப் பெருக்க, தொழில் துறையை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்பாக ஊக்குவித்து வருகிறது. தமிழகத்தின் தென்பகுதிகளில் தொழில் முதலீடுகளை ஈர்க்க, சிறப்புச் சலுகைகள்

வழங்கப்பட்டுள்ளன. தென் மாவட்டங்களில் தொழில் மேம்பாட்டினை ஊக்குவித்திட, மதுரை–தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்தை, செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, முனைப்புடன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உலக முதலீட்டாளர்களின் மாநாட்டை, மே 23-24ல் நடத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பெரும் தொழில்களுக்கும், சிறு குறு தொழில்களுக்கும் திட்ட அனுமதிகளை எளிமைப்படுத்த, தனித்தனியே ஒற்றை சாளர இணைய தளங்கள் 2015-16ல் தொடங்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சிறுகுறு தொழிற்சாலைகளுக்கு வட்டி மானியம், முதலீட்டு ஊக்கத்தொகை, கட்டமைப்பு மேம்பாடு மானியம் போன்ற பல சலுகைகளை, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கி வருகிறது. முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கான சிறப்புத் திட்டம் ஒன்றையும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இவை அனைத்துமே, தமிழ்நாடு தொழில் துறையில் மேம்பாடு பெற்றிடவும், அதனால் பல புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு இளைஞர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தில்தான், செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்களில், 45 இலட்சம் பேர் பதிவு செய்துள்ளனர் என்றும், அவர்களெல்லாம் வேலை இல்லாமல் உள்ளனர் என்பது போன்றும் ஒரு கற்பனையை சிலர் செய்து வருகின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பெரும்பாலானோர், தனியார் நிறுவனங்களில் பணி செய்து வருகின்றனர். எனினும் அவர்களில் பலர், அரசு வேலைகளுக்காக இவ்வாறு பதிவு செய்துள்ளனர். தமிழ்நாட்டில் மொத்தம் 13 இலட்சம் அரசு ஊழியர்கள் உள்ள நிலையில், எல்லோருக்கும் அரசு வேலை வழங்குவது என்பது இயலாத ஒன்று. ஆகவே, இத்தகைய தொழில் முதலீடுகளை ஏற்படுத்தி புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதன் மூலமாக மட்டுமே, இத்தகைய தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும். இத்தகைய பணிகளை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் ஊக்குவித்து வருகின்றன. இவற்றின் வாயிலாக மட்டுமே, சென்ற ஆண்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான

திறன்களைப் பெறும் வகையில் 1.5 இலட்சம் இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். இவர்கள் மருத்துவம் சார்ந்த சேவைப் பணிகள், பிற சேவைத் துறைப் பணிகள், கட்டுமானத் துறை, தொழிற்சாலைகளில் தொழில்நுட்பப் பணிகள் போன்ற பல்வேறு துறைகளிலும் வேலைகளைப் பெறுவதற்கான தகுதியை அரசு வழங்கிய சிறப்பு பயிற்சியின் மூலம் பெற்றுள்ளனர். இதைத் தொடர்ந்து 2015-16 ஆம் ஆண்டில் இத்தகைய பயிற்சிகளை 2 இலட்சம் நபர்களுக்கு அளிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு இலக்கிட்டுள்ளது. இதற்காக திறன் மேம்பாடு நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் 100 கோடி ரூபாய் 150 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வேலைவாய்ப்புக்கு இந்த நிலைநிலை அறிக்கையில் எதுவுமே இல்லையென்று கூறி, விவரங்கள் இருந்தாலும் அவற்றை பார்க்கக்கூடாது என்ற உறுதியோடு சிலர் உள்ளனர்.

இந்த நிதிநிலை அறிக்கையை வெற்று அறிக்கை என்றும் எத்தகைய புதிய திட்டங்களும் இல்லை என்றும் யாருக்கும் பயன்படாத அறிக்கை என்றும் சிலர் விமர்சனம் செய்து உள்ளனர். அவர்களது பார்வை வெற்றுப் பார்வை. அதனாலே இது வெற்று அறிக்கை ஆக தென்படுகிறது என்றே கருதுகிறேன். 1,84,296 கோடி ரூபாய் அளவிற்கான செலவினங்களை மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை எவ்வாறு வெற்று அறிக்கையாக இருக்கும் என்பது எனக்கு தெரியவில்லை. அச்சடிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையை படிக்காதவர்கள்தான் இதனை வெற்று அறிக்கை என விமர்சனம் செய்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் கூறிய கருத்துக்கள் என் நினைவுக்கு வருகிறது. இதுபோன்று வெற்று அறிக்கை என்று சொல்பவர்களைப் பார்த்து, ஒருவேளை அவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகத்தில் எதுவும் அச்சடிக்கப்படாமல் விடுபட்டுவிட்டதோ என அஞ்சியதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு முக்கியத் துறைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாட்டுக்கு போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பல திட்டங்களுக்கு கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிக்கை எவ்வாறு அவர்களுக்கு வெற்று அறிக்கை ஆகத் தெரிகிறது? கிட்டப் பார்வை உள்ளவர்களுக்கு அருகில் உள்ளதுதான் தெரியும், தூரப் பார்வை உள்ளவர்களுக்கு தூரத்தில் உள்ளதுதான் தெரியும், அரசியல் காழ்புப் பார்வை உள்ளவர்களுக்கு, நிதிநிலை அறிக்கையில் எதுவுமே தெரியாது.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்றபின் சமர்ப்பிக்கப்படும் ஐந்தாவது நிதிநிலை அறிக்கை இது. எந்த அரசும் ஒவ்வொரு ஆண்டும் புதுப்புதுத் திட்டங்களை தீட்டிக் கொண்டே இருக்க முடியாது. புதிதாக ஒரு அரசு பொறுப்பேற்றால் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற பல புதிய திட்டங்களை முதல் ஆண்டில் தீட்டுவது இயற்கை. அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் சூழ்நிலைக்கேற்ப சில திட்டங்களை மாற்றி அமைத்தும் சில புதிய திட்டங்களை அறிவித்தும் செயல்படுத்தலாம். மாண்புமிகு அம்மா அவர்களது அரசைப் பொறுத்தவரை, தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளுக்கேற்ப பல புதிய திட்டங்களை முதல் நிதி நிலை அறிக்கையிலும், அதைத் தொடர்ந்து தேவைக்கேற்ப திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விதி 110 ன் வாயிலாகவும் அறிவித்து அதனை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் இந்த திட்டங்களை முழுமையாக செயல்படுத்துவதற்கே மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனினும், இந்த நிதிநிலை அறிக்கையிலும், தற்போதைய சூழ்நிலைக்கேற்றவாறு சில திட்டங்களுக்கும், துறைகளுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டும் சில புதிய திட்டங்களைச் சேர்த்தும், இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தகைய புதிய திட்டங்களைப் பற்றி நேற்று விரிவாக இம்மாமன்றத்தில் எடுத்துரைத்தேன். எனவே புதிய திட்டங்கள் இல்லை என்பவர்கள் நிதிநிலை

அறிக்கையை முழுமையாக படித்துப் பார்க்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சூரிய மின்சக்தி பற்றி சில உறுப்பினர்கள் பேசினார்கள். அது குறித்து விரிவான பதிலை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்த அவையில் அறிவித்துள்ளார். எனவே, அது பற்றி நான் மீண்டும் விளக்கமளிக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

மின்சாரப் பற்றாக்குறை பற்றி எந்த கருத்தும் இல்லை என சிலர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் இது பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்றபோது மின்பற்றாக்குறை எவ்வாறு இருந்தது என்பதையும், அதன் பிறகு எவ்வாறு அது சரி செய்யப்பட்டு வருகிறது என்பதையும், அதனால் எந்த அளவிற்கு மின் பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் விரிவாக இந்த நிதிநிலை அறிக்கை தெரிவித்துள்ளது. அதற்காக அரசின் நிதி உதவி எந்த அளவுக்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்ற பொழுது மாநிலத்தின் மின்தேவை 12,000 மெகாவாட் ஆனால் மின் வழங்கல் திறன் 8,000 மெகாவாட்டாக மட்டுமே இருந்தது. மின் பற்றாக்குறை 4,000 மெகாவாட்டாக இருந்தது. தற்போது தமிழ்நாட்டின் மின் வழங்கும் திறன் 13,000 மெகாவாட் அளவை எட்டியுள்ளது. இதில் இருந்து எந்த அளவுக்கு மின் பற்றாக்குறை குறைந்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் செயல்திறனை மேம்படுத்தி, தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையை முழுமையாக நீக்கத் தொடர்ந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நிதிநிலை சீர்குலைந்துவிட்டது, சிதைந்துவிட்டது, அதனால் தமிழக அரசு நெருக்கடி வலையில் சிக்குண்டு விட்டது, ஆழமான கடன்களில்

மூழ்கி திவாலாகும் கட்டத்தை எட்டிவிட்டது என்றெல்லாம் சிலர் அறிக்கை விட்டுவருகின்றனர். இது அவர்களுடைய அபார கற்பனைத் திறனையும், கண் விழத்தபடியே அவர்கள் காணுகின்ற பகல் கனவையும் பிரதிபலிப்பதாக உள்ளது. அவ்வாறு அறிக்கை விடுபவர்கள் ஏதோ சில ஏடுகளில் தமிழ்நாட்டின் மொத்த கடன் நான்கு லட்சம் கோடி ரூபாய் என தவறாக வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தை பற்றிக்கொண்டு அதை வைத்து மக்களைத் திசை திருப்பும் வகையில் அறிக்கையினை வெளியிட்டுள்ளனர். சிலர் 2015-2016 பட்ஜெட், வளர்ச்சிக்கு உதவாத கடனில் மூழ்கடிக்கும் வெற்று அறிக்கை என்று ஒரு வெற்று வேட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அரசு பெறும் கடனைப் பற்றி இப்படி பொதுவாக நிலவிவரும் பல்வேறு தவறான கருத்துக்கள் மக்களை பீதியடையச் செய்யும் நோக்குடன் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகின்றன. அவர்களுடைய கனவெல்லாம் தமிழகத்தின் நிதிநிலை ஏதோ மோசமடைந்துவிட்டதாக ஒரு கற்பனையைச் செய்து, அதை மக்களிடம் பரப்பினால் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதைப் போல அவர்களுக்கு ஏதாவது அரசியல் ஆதாயம் ஏற்படும் என்று, தொடர்ந்து ஏதாவது கூறி வருகின்றனர். அரசுக் கடன் பற்றிய நேற்றைய எனது பதில் இவர்களுக்கு தெளிவைத் தரும் என்று கருதுகிறேன்.

தமிழக அரசின் மொத்த கடனுக்கும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்குமான விகிதம் மத்திய நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே சரியாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், அதை மேலும் குறைப்பதற்குமான முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் நிதிநிலை திவாலாகும் நிலை என்பதெல்லாம், மாண்புமிகு அம்மா அவர்களது அரசுக்கு எதிரானவர்களின் பகல் கனவே என்பதையும் தமிழ்நாட்டின் நிதிநிலை சிறப்பாக பராமரிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நேற்று கூட அரசு கடன்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு கணேஷ் குமார் பேசும்போது அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் கடன்பற்றிக் கேட்டார். அவருக்கு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நிதி

ஆணையத்தின் பரிந்துரையான மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவு 25 சதவீதம் என்பது அரசு கடன் மட்டும்தான். எனவே, இது வரம்பிற்குள்தான் உள்ளது. அவர் கேட்டபடி அரசு கடன் 2014-2015 ஆம் ஆண்டின் இறுதியில் 1.81 லட்சம் கோடி ரூபாய். தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் 73,708 கோடி ரூபாய். போக்குவரத்துக் கழகங்கள் நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் 2,084 கோடி ரூபாய். இவற்றுடன் பிற அரசுத் துறை நிறுவனங்கள் நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடனைச் சேர்த்தாலும் மொத்தம் 2,64,701 கோடி ரூபாய் தான் வருகிறது. குற்றஞ்சாட்டும் இவர்கள் கணக்குப்படி, எங்கிருந்து 4 லட்சம் கோடி என கணக்கிட்டார்கள் என்பதை மாமன்ற உறுப்பினர் திரு கணேஷ் குமார் அவர்களும், அவர் சார்ந்த இயக்கத்தின் தலைவரும் தான் விளக்க வேண்டும். ஏதோ அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காக மனம்போன போக்கில் அறிக்கை விடுவதும் பேசுவதும் இவர்களின் அறியாமையையே வெளிப்படுத்துகிறது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**